பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் வசூல் மேலாண்மைக் கிளை (ARMB), எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422 2231314, 0422-2231345. மின்னஞ்சல் : **cs4371@pnb.bank.in**

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 27.10.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)
முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 27.10.2026, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரார்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரார்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் ‘எங்கு உள்ளதோ உள்ளபடி’, ‘என்ன உள்ளதோ உள்ளபடி’, ‘எப்படியுள்ளதோ உள்ள நிலையில்’ விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : **தெரியவில்லை. (பல்லடம் சார் பதிவகத்தில் 24.09.2026 தேதியிட்ட ஆன்லைன் வில்லங்கச் சான்றின்படி)**

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரார்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் /உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் /கொள்நிலை/ஆக்கபூர்வ சுவாதீனம்	1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
கிளை : திருப்பூர் (ID 044900) (தற்போது கோயம்புத்தூர் ARMB–க்கு மாற்றப்பட்டுள்ளது) **M/s. ஸ்ரீ கௌரி டெக்ஸ்,** **கடன்தாரர் :** **M/s. ஸ்ரீ கௌரி டெக்ஸ்,** எண்.3/3, சுக்காம்பாளையம், KSN பாளையம், பல்லடம் தாலூகா, திருப்பூர் – **641 662.** **கடன்தாரர் / அடமானதாரர் :** **திரு.S. சின்னசாமி (உரிமையாளர் : M/s. ஸ்ரீ கௌரி டெக்ஸ்),** எண்.3/3, சுக்காம்பாளையம், KSN பாளையம், பல்லடம் தாலூகா, திருப்பூர் – **641 662.**	**(அட்டவணைச் சொத்து) :** **திரு.S.சின்னசாமி பெயரிலுள்ள சொத்து:** **(PAN:AKBPC8681Q):** திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு மாவட்டம், பல்லடம் தாலூகா, பல்லடம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் சுக்காம்பாளையம் கிராம ஊராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட சுக்காம்பாளையம் கிராமத்தில் **இனம் எண்.1 :** பழைய நத்தம் பொது சர்வே எண்.377, புதிய சர்வேயின்படி எண்.424/33ல் உள்ள 1200 சதுர அடி நிலத்தின் **எல்லைகள்:** வேலுசாமி வைத்திருக்கும் நிலங்களுக்குத் தெற்கு, சுப்பே கவுண்டருக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் கீழே குறிப்பிட்ட இனம் எண்.2 நிலங்களுக்கு வடக்கு, தென்வடல் ரோட்டுக்கு மேற்கு, வேலுசாமி வைத்திருக்கும் நிலங்களுக்குக் கிழக்கு. இதன் நடுவே கிழமேல் இருபுறமும் 60 அடி, தென்வடல் இருபுறமும் 20 அடி ஆகமொத்தம் 1200 சதுர அடி விஸ்தீரண நிலம். **இனம் எண்.2 :** பழைய நத்தம் பொது சர்வே எண்.377, புதிய சர்வேயின்படி எண்.424/33ல் உள்ள 2000 சதுர அடி நிலத்தின் **எல்லைகள்:** வேலுசாமி வைத்திருக்கும் நிலங்கள் மற்றும் மேலே குறிப்பிட்ட இனம் எண்.1 நிலங்களுக்குத் தெற்கு, சரஸ்வதி மற்றும் துளசிமணிக்குச் சொந்தமான நிலங்களுக்கு வடக்கு, சுப்பே கவுண்டர் வளாகத்துக்கு மேற்குப்புறமுள்ள தென்வடல் ரோட்டுக்கு மேற்கு, தென்வடல் ரோட்டுக்குக் கிழக்கு. இதன் நடுவே கிழமேல் 40 அடி இருபுறமும், தென்வடல் 50 அடி இருபுறமும் ஆக உள்ள 2000 சதுர அடி நிலம்.	அ) 18.08.2023 **ஆ) (i) ரூ.39,43,588.16 – 31.08.2026 தேதி வரை** மற்றும் **01.09.2026** தேதியிலிருந்து பின்வட்டி, கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளுடன். **(கணக்கு எண். 0449008700333261)** **(ii) ரூ.3,66,172.80 – 31.08.2026 தேதி வரை** மற்றும் **01.09.2026** தேதியிலிருந்து பின்வட்டி, கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளுடன். **(கணக்கு எண். 044900IL00000042)** **ஆக மொத்தம் ரூ.43,09,760.96 (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று அறுபது மற்றும் பைசா தொண்ணூற்று ஆறு மட்டும்)** **இ) 15.11.2023** **ஈ) அடையாளம்**	**1) ரூ.32,20,000/–** (ரூபாய் முப்பத்து இரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) **2) ரூ.3,22,000/–** (ரூபாய் மூன்று லட்சத்து இருபத்து இரண்டாயிரம் மட்டும்) **3) ரூ.20,000/–** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 27.10.2026, (செவ்வாய்க்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

எனவே இனம் எண்.1 மற்றும் 2ல் உள்ள நிலங்களின் மொத்தப்பரப்பு 3200 சதுர அடி அல்லது 297.29 சதுர மீட்டர் உடன் அதிலுள்ள கட்டிடங்கள் அவற்றின் மின்வடங்கள், சன்னல்கள், கதவுகள், நிலவுகள், காப்புத் தொகைகள் மற்றும் அனைத்து இணைப்புகள், சிறப்புக் கட்டுமானங்கள், மின்சார இணைப்பும் மற்றபிற இணைப்புகளுடன், சொத்தைச் சென்று சேரும் மாமூல் ரோடுகள் மற்றும் லேஅவுட் ரோடுகளின் உபயோக உரிமை சேர்ந்த சொத்து.

அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் :
11.010845 N, 77.232647 E

மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் ‘எங்குள்ளதோ அங்கு’, ‘என்ன உள்ளதோ அது’ மற்றும் ‘உள்ளதுள்ளவாறே’ என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **27.10.2026 (செவ்வாய்க்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
https://baanknet.com & www.pnbindia.in

தேதி : 25.09.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)–ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

22x16w

‘Dinamani’
Tirupur Edition
27.09.2026 - Sunday